**C.O.S.No.01/2022** **தேதி – 11.11.2025**

**வா.சா.1.– ராமசாமி சந்திரன்**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–**

வழக்கு தாக்கல் செய்த நிறுவனம் ஒரு பங்கு நிறுவனம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 1வது ஆவணத்தின்படி நானும், எனது சகோதரர்கள் நித்தியானந்தன், மாதவன் ஆகியோர்கள்தான் பங்குதாரர்கள் என்றால் சரிதான். 2022ல் நான் தாக்கல் செய்யும் போது மேற்படி பங்கு நிறுவனத்தின் சார்பாக ஆர்.என்.அசோக்குமார் என்பவர் தான் பிராதில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பிராதை தாக்கல் செய்யும் போது மேற்படி அசோக்குமார் வாதி பங்கு நிறுவனத்தில் பங்குதாரர் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.11, வா.சா.ஆ.14 ஆவணத்தில் பங்குதாரர்கள் ஆர்.என்.அசோக்குமாருக்கு வழங்கிய அதிகார பத்திரத்தின் அடிப்படையில்தான் பிராதில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராது நெடுந்தலைப்பில் அசோக்குமார் Chief Executive of the Company என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கம்பெனி என்றால் என்ன, பங்கு நிறுவனம் என்றால் என்ன என்பது பற்றி எனக்கு தெரியும். பங்கு நிறுவனம் சார்பாக வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் மேற்படி பங்கு நிறுவனத்தை அதன் பங்குதாரர் மூலம்தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் பிராதை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.11ல் வெளியிலிருந்து வரும் பணங்களை வசூல் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 1ம் பிரதிவாதி மீது Trademark சம்பந்தமாக வழக்கை தாக்கல் செய்ய மேற்படி அசோக்குமாருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அதனால் அதிகாரம் இல்லாத நபர் மூலம் வழக்கை தாக்கல் செய்து, அது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால்

சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக சமரச மையத்திற்கு அனுப்பாமல் இந்த வழக்கை நேரடியாக தாக்கல் செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் அது தவறு. 1998ல் மேற்படி எங்களுடைய டிரேடுமார்க்கை பதிவு செய்துள்ளோம். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ 4 எந்த தேதியில் ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கார்னேசன் கலர் பேக்கிங்தான் என்னுடைய டிரேடு மார்க்கை டிசைன் செய்து கொடுத்தார். என்னுடைய டிரேடுமார்க் என்னென்ன கலர் இருக்க வேண்டும் என்ற விபரத்தை நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் விளக்கம் கொடுத்தோம். பர்கானா என்பவர் ஒரு முஸ்லீம் பெண். பர்கானா அணிந்த முஸ்லீம் பெண். பர்கான என்ற பெயர் ஒரு அரபு மொழிச் சொல். அதற்கு அழகான பெண் என்று அர்த்தம். இந்த படத்தை எங்களது நிறுவனத்திற்கு படமாக கொண்டுவருவதற்கு எங்களுக்கு எப்படி தோன்றியது என்றால் 2ம் பிரதிவாதி கூறியதால்தான் நாங்கள் தயார் செய்தோம். 1998க்கு முன்பாக 10 ஆண்டுகளாக நான் 2ம் பிரதிவாதிக்கு பர்கானா பிராண்டில் ஏலக்காய் அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். சுமார் 1998க்கு முன்பாக 2 வருடம் அனுப்பியிருப்பேன். நாங்கள் அனுப்பிய ஏலக்காய்களை 2ம் பிரதிவாதி சலீம் என்பவர் சவுதி, அரேபியா, துபாய், எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு சப்ளை செய்வார். மேற்படி 1ம் பிரதிவாதி மேற்படி நாட்டில் உள்ள யார் யாருக்கு அனுப்ப வேண்டும் என்று கூறுகிறாரோ அதன்படி நாங்கள் அனுப்பி வைப்போம் என்றால் சரிதான். நான் பிராதுடன் தாக்கல் செய்த இன்வாய்ஸ்கள் அனைத்தும் 1998 க்கு முந்தைய இன்வாய்ஸ் என்றால் சரிதான். மேற்படி இன்வாய்சில் கண்ட சரக்குகளை 2ம் பிரதிவாதி யாருக்கு அனுப்பச்சொல்லி ஆர்டர் செய்கிறாரோ அவர்களுக்கு நாங்கள் நேரடியாக 2ம் பிரதிவாதி கூறியதின்பேரில் அனுப்பி வைப்போம் என்றால் சரிதான். மேற்படி அரபு நாடுகள் விபரம் 2ம் பிரதிவாதி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனவே 2ம் பிரதிவாதி அவரது நாட்டில் ஏலக்காய் விற்பதற்கு

உருவாக்கப்பட்டது தான் அந்த பர்கானா பிராண்ட் என்று சொன்னால் அது தவறு. 2ம் பிரதிவாதி பர்கானா பிராண்டை 1996லிருந்து உபயோகப்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 1996ல் உபயோகப்படுத்தி வந்து, 1999ல் அவர்கள் நாட்டில் மேற்படி டிரேடுமார்க்கை பதிவு செய்ய விண்ணப்பம் கொடுத்து, 2004ல் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். நானும், 2ம் பிரதிவாதியும் 11.05.2016 ல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு மேற்படி பிராண்டை நாங்கள் பயன்படுத்த 2ம் பிரதிவாதி அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு வா.சா.ஆ. 9, வா.சா.ஆ.10 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.9 அறிவிப்பிற்கு 12.11.2020த்திலும், வா.சா.ஆ.10 அறிவிப்பிற்கு 28.02.2022த்திலும் பதில் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிவிப்பிலும் மேற்படி பிராண்ட் 2ம் பிரதிவாதி சலீம் என்பவரின் பிராண்ட் தான் என்று பாரா எண்.12 ல் சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பும் போதே 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பில் இந்த பிராண்ட் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளார் என்றும், ஆனால் 2ம் பிரதிவாதி மீது வழக்கை தாக்கல் செய்தால் அது பாதகம் ஆகிவிடும் என்பதால் 1ம் பிரதிவாதிக்கு மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பர்கானா பிராண்ட் 2ம் பிரதிவாதியின் கண்டுபிடிப்பு என்றும், எனவே அதற்கு தாங்கள் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி இந்த பிராண்டை பயன்படுத்த எங்களுக்கு அனுமதி கொடுத்ததை நாங்கள் தவறுதலாக பயன்படுத்தி, இந்தியாவில் அதை பதிவு செய்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பர்கானா பிராண்டை அரபு நாடுகள் தவிர வேறு எந்த நாட்டிற்கும் அனுப்பவில்லை என்றால் சரிதான். பர்கானா பிராண்டிற்கு அரபு நாடுகளில் மட்டும்தான் மதிப்பு அதிகம் என்றால் சரிதான். நாங்கள் பதிவு செய்த டிரேடுமார்க் இந்தியாவில் மட்டுமே பயன்படுத்த

பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் பர்கானா பிராண்டை விற்காத போதும், இந்தியாவில் வேறு யாரும் 2ம் பிரதிவாதியுடன் வியாபார தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறி பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த பிராண்டை எங்கள் வழக்குப்படி நாங்கள் முதன்முதலில் பயன்படுத்தியது 1998ம் ஆண்டு முதல்தான் என்றால் சரிதான். அதற்கு முன்பாகவே 2ம் பிரதிவாதியால் அரபு நாடுகளில் பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. எங்களுக்கு முன்பாகவே அரபு நாடுகளில் 2ம் பிரதிவாதி இந்த பிராண்டை பயன்படுத்தி வந்ததால் எங்களுக்கு இந்த பிராண்டை பொறுத்து எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.